பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

14 08 2026 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கென்யாவுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.
- விவசாயிகளின் நலனுக்காக மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு செயல்பட்டு வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
- புத்தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்த, தேவையான கொள்கை மற்றும் நிதி ஆதரவை அரசு வழங்கி வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- தேசப் பிரிவினை துயரங்களின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.
- துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் ஜம்ஷெட்பூர் அணி, விமானப் படை அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கென்யாவுடனான நல்லுறவை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

கென்யாவின் நாடாளுமன்ற தலைவர் திரு. மோசஸ் தலைமையிலான குழு புதுதில்லியில் குடியரசு துணைத்தலைவரை நேற்று சந்தித்தது.

அப்போது பேசிய திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இரு நாடுகளும் நீண்ட நல்லுறவைப் பேணி வருவதாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகளில் தொழில்நுட்பங்களைப் புகுத்துவது குறித்து கென்யாவுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய இந்தியா தயாராக உள்ளது என்று அவர் கூறினார்.

கென்ய நாடாளுமன்ற வளாகத்தில் மகாத்மா காந்தியின் சிலை நிறுவப்படுவதற்கு அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

கல்வி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளும் ஒத்துழைப்பை வலுப்படுத்த அதிக வாய்ப்புகள் உள்ளதாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

விவசாயிகளின் நலனுக்காக மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு செயல்பட்டு வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களுக்கு பிரதமரின் தேசிய விவசாயிகள் வளர்ச்சித் திட்ட நிதியை விடுவிக்க அவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக இம்மாநில அரசுகளின் வேளாண் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் காணொலி வாயிலாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், கடந்த 12 ஆண்டுகளில் நாட்டின் வேளாண் வளர்ச்சி அதிகரித்துள்ளதாக கூறினார்.

விவசாயிகளின் வருவாயைப் பெருக்குவதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வேளாண் கட்டமைப்பு, உற்பத்தி ஆகியவற்றை அதிகரிக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

<<<<>>>>

புத்தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்த, தேவையான கொள்கை மற்றும் நிதி ஆதரவை அரசு வழங்கி வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற இளையோர் மாநாட்டில் பேசிய அவர், புத்தொழில் நிறுவன சூழலை மேம்படுத்த மாநில அரசுகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்குவதாக கூறினார்.

புத்தொழில் நிறுவனங்கள் மூலம் பெருநகரங்கள் மட்டுமல்லாமல் சிறிய கிராமங்களும் பயனடைய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியும், கடனுதவிகளும் பெருமளவு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா, மாநிலத்தில் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை மேம்படுத்த உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் இரண்டாம் நிலை நகரங்களுக்கு இடையேயான விமானப் போக்குவரத்தை மேம்படுத்த பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருவதாக விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

விஜயவாடா - வாரணாசி இடையே நேரடி விமானப் போக்குவரத்து சேவையை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

இந்த விமான சேவை, ஆன்மிக சுற்றுலாவை மேம்படுத்தும் என்று தெரிவித்தார்.

ஆந்திர மாநிலத்தில் விமான நிலைய கட்டமைப்புகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

விஜயவாடா, ராஜமுந்திரி, கடப்பா ஆகிய நகரங்களில் புதிய முனையங்களுக்கான பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளதாக திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<>>>>

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் நாட்டுப்பற்றை வலுப்படுத்துவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இந்த இயக்கத்தின்கீழ், இன்று தமது இல்லத்தில் தேசியக்கொடியை ஏற்றியபின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கோடிக்கணக்கான மக்கள் தேசியக்கொடியை ஏற்றிவருவதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்பிற்கு ஏற்ப நாடு முழுவதும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் மக்கள் இயக்கமாக மாறி வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தமது இல்லத்தில் தேசிய கொடியை ஏற்றிவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிஜேபி சார்பில் நாடு முழுவதும் தேசியக்கொடி ஏந்தி பேரணி நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அனைத்து நகரங்களிலும், கிராமங்களிலும் இந்த பேரணி நடைபெறும் என்று திரு ஜெ பி நட்டா கூறினார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இந்த இயக்கத்தின்கீழ் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

அனைவரும் இல்லங்களில் தேசியக் கொடியை ஏற்ற வேண்டும் என்று மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

இந்தியாவை உலகின் உற்பத்தி மையமாக உயர்த்துவதற்கான முக்கிய துறைகள் என்ற தலைபைபிலான அறிக்கையை நித்தி ஆயோக் துணைத்தலைவர் திரு அசோக் குமார் Lahiri வெளியிட்டார்.

உலகளாவிய போட்டிகளை எதிர்கொள்ளும் நிலையில் உள்ள 12 முக்கியத் துறைகள் குறித்து இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய போட்டிகளை எதிர்கொள்ளும் திறன், மதிப்புக்கூட்டுதல், வேலைவாய்ப்பு உருவாக்கம், உலகளாவிய விநியோகச் சங்கிலுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் வகையில், உற்பத்தித்துறையின் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான செயல் திட்டம் ஆகியவை இதில் அடங்கியுள்ளன.

மின்னணுப் பொருட்கள், எஃகு, வாகனம், பாதுகாப்பு தளவாடங்கள், ட்ரோன்கள், ரசாயனங்கள், ஜவுளி, மருந்துப் பொருட்கள் உற்பத்தி, உபகரணங்கள் உள்ளிட்டவை உற்பத்திக்கான முக்கிய துறைகளாக இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

<<<<>>>>

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு விரைந்து தீர்வுகாண கூடுதல் மண்டல அமர்வுகளை அமைக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த், நீதிபதிகள் Joymalya, Mohana ஆகியோர் அடங்கிய அமர்வு, மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் தணிக்கை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளது.

நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று தேசிய நுகர்வோர் ஆணையத் தலைவருக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

பஞ்சாபில் வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு பிறகு 20 லட்சத்து 66 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

இறுதி வாக்காளர் பட்டியல் வரும் அக்டோபர் 12-ஆம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

தேசப் பிரிவினை துயரங்களின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

1947ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்தபோது இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையால் ஏற்பட்ட துயரங்கள் மற்றும் உயிரிழப்புகளை நினைவுகூரும் வகையில் 2021ஆம் ஆண்டு முதல் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதனையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரிவினை துயரங்கள் தொடர்பாக புதுதில்லியில் நடைபெறும் தேசிய கருத்தரங்கில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்கிறார்.

பஞ்சாபின் அம்ரித்சரில் நடைபெறும் நிகழ்வில் மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் பங்கேற்க உள்ளார்.

தில்லியில் பிரிவினை துயரங்கள் அருங்காட்சியகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் திரு. கரண்ஜித் சிங் சாந்து கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலத்தின் சில இடங்களில் இன்று அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மேற்குவங்கம், ஜார்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களிலும் சில இடங்களில் கனமழை பெய்யும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே ஒடிஷாவின் வட மாவட்டங்களில் தொடர் மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

Jalaka, Budhabalanga உள்ளிட்ட ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இதனையடுத்து, Balasore, Mayurbhanj உள்ளிட்ட மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மேற்குவங்கத்தின் Purelia, மேற்கு Medinipur, Burdwan உள்ளிட்ட பகுதிகளிலும் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

கேரளம் மாநிலத்தின் கோட்டயம், பத்தனம்திட்டா, இடுக்கி, கன்னூர், வயநாடு உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, ஹரியானா, கோவா, ஆந்திரா மற்றும் கர்நாடகாவின் சில இடங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் ஜம்ஷெட்பூர் அணி, விமானப் படை அணியை வென்றது.

குவஹாத்தியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஜம்ஷெட்பூர் அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஷில்லாங், லாங்ஸ்னிங் அணிகள் மோதிய மற்றொரு ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

ஜம்ஷெட்பூர், ஷில்லாங் அணிகள் காலிறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

காலிறுதி ஆட்டங்கள் நாளை மறுநாள் தொடங்குகின்றன.

<<<<The End>>>>